## மதுரை வாலைசாமி

# ஞானக் கும்மி



150 Rs Rs

தொகுப்பு :

## வைரமுத்து கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# என்னுரை

அன்புக்குரிய வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்.

பழந்தமிழர் நன்கு கற்றுணர்ந்த, பழம்பெரும் நூலான ஞானக் கோர்வை என்னும் நூலிலிருந்து **மதுரை வாலைசாமி ஞானக் கும்மி** என்னும் பகுதியை சிறு நூலாகத் தொகுத்து உங்களிடம் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலை இதுவரை பாதுகாப்பாக வைத்திருந்து மனமுவந்து எனக்குத் தந்துதவிய அன்பன் **கதிரமலை இராசகுலேந்திரன் ஐயா** அவர்களை மிகவும் பாராட்டுகிறேன்.

ஞானக் கோர்வை நூலிலுள்ள ஏனைய பாடல்களையும் தொகுத்து விரைவில் உங்கள் கரங்களில் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு,
**வைரமுத்து கணேசன்**
கலைமகள் வீதி
சேனைக்குடியிருப்பு-02
கல்முனை.
0719238566

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்: பன்னிரண்டு



மதுரை வாலைச்சாமி

# ஞானக் கும்மி

## காப்பு

1. சீர்மேவு ஞான வடிவான-பர
தேசிகன் சற்குரு தன்னருளாற்
பார்மீதில் ஞானக் கும்மி பாட-சிவ
பாலன் கணபதி காப்பாமே.

2. அம்பிகை வாலை பதம் போற்றி-அருள்
ஆனந்தக் கும்மித் தமிழ்பாடத்
தும்பி முகனுக் கிளையவ னாஞ்சிவ
சுப்பிர மண்யனுங் காப்பாமே.

3. நாலாம் வேதமு மோராறும்-வெகு
நாநா பேதமாய் நின்றானை
மேலாய்ப் போற்றிக் கும்மி பாடச்-செந்தில்
வேலவன் தன்பதங் காப்பாமே.

4. பாரி லுயர்மது ராபுரியில்-வாலை
சாமிசொல் லுங்கும்மிப் பாடலுக்கு
மேரு வதனடி மூலமுக் கோண
விநாயகன் தன்பதங் காப்பாமே.

5. ஆதியும் அந்தமும் ஒன்றாகி-வளர்
அண்டபிண் டமு மிரண்டாகிச்
சாதி பலபல வேறாகி நின்று
தத்துவங் கேளடி ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தேகமா னதோர் மலபாண்டம்-அதிற்
சிற்பனம் வந்திடு முற்பனத்தை
யோக மெனுந் தமிழ்ப்பாடலுக்கு-மனம்
உவந்து கேளடி ஞானப்பெண்ணே!

7. ஏகப் பெருவெளி பட்டணமாம்-அதில்
எவனோ சித்த னொருவனுண்டாம்-அந்த
வாச னிலைபேசா வாயுமில்லை-அந்த
மாப்பிள்ளை பெண்ணென்று ஞானப்பெண்ணே!

8. சாட்சி யெனும்பிர மன்பிள்ளைக்கு மூலச்
சத்தியென்ற வொரு பெண்ணாச்சு;
சூட்சும காரண மிரண்டினுக் குநிலை
தூலநா மென்கிறாள் ஞானப்பெண்ணே!

9. ஊமையன் என்றே அறிந்துகொண்டாள் அந்த
ஊமைபேச் செல்லாமே நாமென்கிறாள்;
சிமையை ஆளத் துசங் கட்டினாள் அந்தச்
சிமாட்டி தானடி ஞானப்பெண்ணே!

10. பெண்ணர சானதி ரத்தின மாமதைப்
பெண்ணென்று சொல்லவுங் கேள்வியுண்டோ?
மண்ணையும் விண்ணையுங் கூட்டிப் பயிர்செய்து
மார்க்கத்தைக் கேளடி ஞானப்பெண்ணே!

11. பட்டணங் கட்டி மகராசி துரை
பாங்குடன் செய்த அதிகாரச்
சட்டமுஞ் சொல்லத் தொலையாதே விதைச்
சற்றே கேளடி ஞானப்பெண்ணே!

12. அஞ்சூர் அஞ்சூர் வகுப்பாச் சாமம் அதில்
அஞ்சூர் அஞ்சு பிரிவாச்சாம்;
அஞ்சூ ருக்கொரு வித்தாச் சாமம் அதற்
கான குளமுண்டு ஞானப்பெண்ணே!

13. ஊரை யடுத்து மலையுமுண் டாம் அதற்
குள்ளாயிருந்த நிலைக்காரர்
பேரை யுரைக்க இனிக்கே ளுமவர்
பெருமைதா னென்னடி ஞானப்பெண்ணே!

14. தலைமன் னாரிலி ருப்பவ ராமந்தச்
சட்டையப் பிள்ளையும் நெட்டையராம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமு மான்யமு மென்னவன் றாளந்த
நிசந்தெ ரியுமோ ஞானப்பெண்ணே!

15. கும்பகோ ணத்திலே அப்புப்பிள் ளையவர்
கூட்டமற றால்வெகு வாட்டமென்று
செம்பாதிப் பங்குதான் கேட்டுவந் தால்நியாயந்
தெளிவ தெப்படி ஞானப்பெண்ணே!

16. மூலக் குடிவன்னித் தேவரை வரவர்
மூர்க்கமுந் திர்க்கவு மார்க்கமுண்டோ?
நாலு கரைப்பங்கு நாமென்கி றாரிந்த
ஞாயந் தெரியுமோ ஞானப்பெண்ணே!

17. காத்தவ ராய கவுண்டனுக்குத் திசைக்
காவலும் மற்ற விசாரணையும்
பார்த்து வருவது நாமென்கி றாரிந்தப்
படிநி லைக்குமோ ஞானப்பெண்ணே!

18. ஆகாய மான பரஞ்சோ தியவர்
அஞ்சுக் கரைப்பங்கும் தனக்குள்ளே
சேகர மாமென்றுஞ் சொல்லுகி றாரிந்தச்
சேதியைக் கேளடி ஞானப்பெண்ணே!

19. அம்பலக் காரரும் மூன்றுபே ராம் பின்னும்
அந்தக னாட்டுக் கணக்கனெ ன்றாம்;
வம்புசெய் தாலந்த முன்னா னனுப்படி
வகைதெ ரியுமோ ஞானப்பெண்ணே!

20. ஒன்பது கூத்தரும் பங்காளி எந்த
ஊருக்கு ஞேர்களும் அப்படியாம்;
ஐம்பது சேருவைக் காரருக் குமவன்
அண்ண னொருவனாம் ஞானப்பெண்ணே!

21. கோயிற் குருக்க ளொருபார்ப் பான்தெப்பக்
குளத்தின் மேலே யவன்வீடு;
தாவிக் கொண் டுதொடை தட்டுகி றானிலஞ்
சாருமோ கேளடி ஞானப் பெண்ணே!

22. செட்டி யொருவனாம் பங்கா ளிஅதிற்
சேர்ந்தவனாக மிக வோங்கிக்
கட்டி வராகனைக் கொண்டு வந்தால் காணி
யாட்சி செல்லுமோ ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. காரியக் காரரோ அஞ்சுபே ராமவர்
காரியம் பார்க்க வீரஞ்சு பேராம்;
மாரீசக் காரர்; சமாதிக்கன் மூன்றுபேர்
வார்த்தையைக் கேளடி ஞானப்பெண்ணே!

24. ஊழியக் காரர் அநேகருண் டாமவர்க்
கும்பளஞ் சம்பளம் நிரம்பவுண் டாம்;
பாளையங் கோட்டைக்குச் சாரிவைத் தாலிவர்
பதுங்குவாரடி ஞானப்பெண்ணே!

25. பாழூ ருக்கொரு மேல்மணி யாமவன்
பார்த்தாற் சின்னப் பயல் காணும்
வேளூ ரானரைப் பங்குத் தனமுதல்
விற்றுக் கொடுக்கிறான் ஞானப்பெண்ணே!

26. ஆராறு குடியு முண்டா கும்மதில்
அந்நியக் குடிமுப்பத் தைந்து முண்டாம்;
ஓராறு பத்துக் குடிதனி லேயஃது
ஒட்டுக் குடியடி ஞானப்பெண்ணே!

27. இத்தனை பேரு மிருந்தா லும்மதில்
இரண்டே பேர்கள் சமுசாரி;
அத்தனை பேரையுந் தள்ளிவைத் தாற்பயிர்
ஆரிடு வாரடி ஞானப்பெண்ணே!

28. ஒற்றோர் ஒன்றை எருதா கும்மதில்
ஒன்று பரம்புமுச் சாலடிக்கும்;
கற்றுடன் காரணங்கண்டா யோஞானக்
கண் கொண்டு பாரடி ஞானப் பெண்ணே!

29. இரண்டு கரைக்குடி மானிய மாமதில்
இட்ட விதையொட்டி ரட்டியுண் டாம்;
பண்டு பழகின மேன்புள்ளிக் காரனும்
பார்த்துப் போயினான் ஞானப்பெண்ணே!

30. புள்ளிக் குறைச்சலும் வாரா மல்முன்னே
போட்ட பலனுங்கை யாடாமற்
கொள்ளையிடச் சொல்லி ஓலைவைத் தாலிது
கொடுமை சொல்லடி ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. வந்த விதியென்றி ருந்தா லும்வசக்
கட்டு நிலுவையுங் கேட்கிறானே
இந்த மகிமை யவன்றா னோவிதற்
கென்ன சுகமடி ஞானப்பெண்ணே!

32. தரிசுக் கிடக்கிற பெட்டியி லேயேறித்
தண்ணீர் பாய்ச்சவுஞ் சொல்லுகிறான்;
வரி கொடுக்கிற தில்லையென் றாற்பூசை
மாட்டுகி றானடி ஞானப்பெண்ணே!

33. ஊரிற் குடியதி ருக்கவொட் டானிருந்
தூழியஞ் செய்யவும் வேலையிட்டான்;
திரமில்லை யென்று சொன்னா லுமவன்
தெண்டம் பிடிக்கிறான் ஞானப்பெண்ணே!

34. அந்த இருபத்தோ ராயிரத் திருநூற்
றுக்கல நெல்லுமே கண்டுமுதல்
வந்ததுண் டோவதில் மூன்றத் தொருபங்கு
வாரம் பிடித்தாண்டி ஞானப்பெண்ணே!

35. மிச்சமிருந்த நெல் லுத்தொகை யில்வாரம்
விண்ணுறுநோய் கொண்ட பேயனுடன்
அச்சுதன் சேயனுந் துங்கக்கோ னானுமாய்
அழித்துப் போட்டாரடி ஞானப்பெண்ணே!

36. நிலம் விளைந்ததுங் காணீ ரோவதிற்
செலவழிந்ததும் பாரீரோ?
அலமந்து திரி யாம லேயருள்
ஆனந்தஞ் சேரடி ஞானப்பெண்ணே!

37. எண்சா ணினு மொரு வீடாமதில்
எட்டொரு பீற்றல் மலக்கூடாம்;
பஞ்சாயக் காரரீ ரைந்துபே ருந்தெய்வப்
பதியி தென்கிறார் ஞானப்பெண்ணே!

38. தேக மென்னுஞ் சிவாலய மாமதிற்
சென்னி சிறுவாயிற் கோபுரமாம்;
காக மான விரண்டு கரக்கோடுங்
கையாங் கேளடி ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. உண்ணாக் கென்ற கொடி மரமாமதிற்
கோபுர சந்திர புட்கரணி
அண்ணாக் கென்றே வலப்புறத் திற்கண்ட
தக்கிணி தீர்த்தமாம் ஞானப்பெண்ணே!

40. நாற்பத்து முக்கோண மண்டப மாம்அதன்
நடுவி ருக்குதாஞ் சிங்காரம்!
பார்ப்பது சக்கரக் கோட்டையிலே யிந்தப்
படியிருக்குதாம் ஞானப்பெண்ணே!

41. பீடமிருப்பது மையத்தி லேபலி
பீட மிருப்பதுங் குய்யத்திலே;
மாடமிருந்த சிவாலயத் தின்மணி
விளக்கி ருக்குது ஞானப்பெண்ணே!

42. இப்படி யான இருக்கோ விலதற்
கெப்படி வாயி லிருக்காதோ
அப்படி யென்று தெரியா மற்றெரிந்
தலைகி றாரடி ஞானப்பெண்ணே!

43. பூட்டைத் திறப்பதுங் கையாலே மனப்
பூட்டைத் திறப்பது மெய்யாலே;
வீட்டைத் திறக்க முடியாமல் வீட்ட
விதியி தென்கிறார் ஞானப்பெண்ணே!

44. வாசலிலே யொரு மேல்வா சலந்த
வாசலிலே சிறு வாசலுண்டு;
நேசமு டன்திரு வாசலிற் பூட்டு
நெருக்கம் பாரடி ஞானப்பெண்ணே!

45. அட்சர மாமொள னாட்சர மாவது
ஆனால் நல்ல திறவு கோலாம்;
உச்சிதமாகத் திறந்தா லேயந்த
உச்சிவழிகாணும் ஞானப்பெண்ணே!

46. கண்ணா லேமனக் கண்ணா லேயதைக்
கண்டாலே வழி யுண்டாகும்;
பெண்ணாசை தன்னை யடுக்கா மல்வழி
பேணிப் பாரடி ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. பார்த்து நடப்பது மெவ்வா சலந்தப்
பாதையறிவது மெவ்வாறு?
மாத்திரை நேரம் பிரியா மற்பாதை
மார்க்கங் கேளடி ஞானப்பெண்ணே!

48. எருக்கி டந்த குழிதான்ன டியதில்
இரண்டு விரற்கடை மேற்றாண்டிக்
கருக்கி டைக்கும் அடையாள மதைக்
கண்டு கேளடி ஞானப்பெண்ணே!

49. மாயன் அரண்மனை காணீ ரோவன்னி
மரமி ருப்பதுங் தோணீரோ?
நேய மதுகடந் தப்பா லேயறு
கோணப் படியடி ஞானப்பெண்ணே!

50. கோணத்தில் நின்று மயங்கா தேசுழிக்
காற்றை யடக்கிச் சிணுங்காதே;
வீணைக் கலைந்து தியங்காதே தூல
வேடத்தைத் தள்ளடி ஞானப்பெண்ணே!

51. தூலத்தை விட்டு விடாயா கிலதிற்
சூட்சத்தைக் காண முடியாது;
பாலத்திலேறி நடந்தக் காற்பெரும்
பாதையி தல்லவோ ஞானப்பெண்ணே!

52. பாதையான பெரும்பாதையைக் கிட்டிடப்
பட்டண முண்டொரு வட்டமதாய்;
நாதமுங் கீதமுங் கேட்குதடி தெய்வ
நாயகன் சந்நிதி ஞானப்பெண்ணே!

53. சந்நிதி யென்னடி கண்டதுண்டோ கண்டால்
தத்துவம் பேசத் திறமுமுண்டோ?
முன்னே முப்பாழுங் கடப்பதுண்டோ அதில்
முச்சுடருண்டடி ஞானப்பெண்ணே!

54. முச்சுடர் வட்டமே சக்கர மாமது
மூக்கு நுனியிற் சுழுமுனையாம்;
அச்சுடர் வட்டத் திருந்தவ னேகுரு
ஆனந்த நந்தியாம் ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. நந்தியிருந்தது வன்னிவட் டம்மதில் நாட்டம் புருவமத்
யானதிட்டம்:
சந்திரனுங் கதிர்ச் சூரியனும் அந்தத் தலத்தில்
நின்றனர் ஞானப்பெண்ணே!

56. நாதவிந்தல்லவோ நால்யோ னிதச நாதவிந் தல்லவோ
எழுதோற்றம்?
நாதவிந்தால் உடலும் உயிரும்பரம் நந்தியைப் போற்றடி
ஞானப்பெண்ணே!

57. விந்து இருந்த தலந்தனிலே குருநந்தி யிருந்தார்
கொலுவாகி;
சிந்தை தெளிந்து மகாரம்வைத் தால் அந்தச் சிமானைக்
காணலாம் ஞானப்பெண்ணே!

58. சிமான் கிட்ட அடுத்தக் கால்மேலைச் சிமை நமக்குக்
குடியாச்சு;
ஆமா மென்று கும்பிப்பாடியருள் ஆனந்தஞ் சேரடி
ஞானப்பெண்ணே!

59. ஆனந்தமான தலந்தானே அது அத்து விதமாந
தலந்தானே
தானந்தமான சதாசிவத்தைப் போற்றித் தாண்டிக் கும்மி
அடியுங்கடி

60. ஞானமாம் ஆயிரத் தெட்டிதழ்ப் பீடம் நாட்டமாகு
சந்திரனார் வீடு
மோனம் இருந்த மகார மவனத்தை, மூட்டிக் கும்மி
அடியுங்கடி

61. குண்டலி வாசி யகாரம டிபிடர்க் கண்டமதிலே யுகாரமடி
உண்டு சுழியின் மகாரம்வைத் தாற்சிவ லோகம்
இதல்லவோ ஞானப்பெண்ணே!

62. ஓங்காரமான பிரணவத் தானெங்கும் உயர்ந்த சோம
கலை நிறைத்தான்
ரீங்காரமான பராசக்தியை நீங்கள் நேர்ந்து
கும்மியடியுங்கடி.

63. பூரக முப்பத்திரண்டாகு மனைப் பூரண கும்பம்
இரட்டியதாம்
கூறவே ரேசகம் எண்ணிரண்டாம் அந்தக் குறிப்
பறிந்துகொள் ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. பிங்கலை யாவதி ரேசகத் தையனர் பூரகந் தன்னி
டைத்தாந்
நங்கலை நந்தியிற் கும்பிக்கவே சிவ நாட்டம் இதல்லவோ
ஞானப்பெண்ணே!

65. அறிந்து கொள்ளு மெழுத்தோடே பவுரனை முதலமா
வாசிமட்டும்
மறந்திடாமற் செய் மாத்திரை யின்படி வாசி வசமாகும்
ஞானப்பெண்ணே!

66. காலாலே கனல் ஏற்றுங்கடி சுழி மேலே கொண்ட
முதூட்டுங்கடி
மூலா தாரத் தலங்கேசர மென்று முழங்கிக்
கும்மியடியுங்கடி.

67. சார்ந்து கொள்ளடி கேசரத்தை முதற்றன்னை யறியலாந்
தானாகக்
கூர்ந்து மூலக் கணபதி பாதத்தைக் கும்பிட்டுக் கொள்ளடி
ஞானப்பெண்ணே!

68. நவ்வெழுத்தே பிரமனாரா குமதில் நாரணன் மவ்
வெழுத்தானானே;
சிவ்வெழுத்தே தெய்வ ருத்திரனாம் இன்னுஞ் செப்புவன்
கேளடி ஞானப்பெண்ணே!

69. செப்பவே வவ்வு மகேசுரனாம் வட்டஞ் சேர்ந்துய சாரும்
சதாசிவனாம்;
தப்பிலா ஐந்தெழுத்தாலே சராசரந் தங்கியிருந்தது
ஞானப்பெண்ணே!

70. வாலையி னட்சர மூன்றாகும் அதை வாய்கொண்டு
சொல்பவரார் காணும்
மேலொன்றுங் கீழொன்றும் மத்திம முங்கூட்டி விரைந்து
பாரடி ஞானப்பெண்ணே!

71. விரைந்து சொல்லுவன் மூன்றெழுத் தாற் சதும் விரிந்து
தானுயர் உண்டாச்சு;
தெரிந்து கண்டவர் தங்களுக்கு காவலை நீட்சையி
தல்லவோ ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. திட்சை யெனுஞ்சிவ சக்கரத் தின்மையந் தேவி யெழுத்தை
நிரை திருத்திக்
காட்சியுடன் சிவ பூஜை செய் தாற்சித்தி கைவச மாமடி
ஞானப்பெண்ணே!

73. கள்ளுண்டு துள்ளுண்டு நில்லாதேபின்பு கஞ்சாஉறக்கமுங்
கொள்ளாதே;
உள்ளுண்டு சோமக் கலையாதி பானத்தை ஊட்டிக்
கும்மியடியுங்கடி!

74. கும்மி அடிப்பெண்கள் அம்பலத்தை யரைக் கூட்டி
அமுதங் குடியுங்கடி
அம்மென்றும் உம்மென்றுஞ் சொல்லாமல் நின்ற
அத்விதம் பாரடி ஞானப் பெண்ணே!

75. அத்வித மாவத்துக் காதியடி மதி ஆயிரத் தெட்டிதழ்ப்
பூசைபண்ண
முத்தி தருஞ் சோமப்பாலை யனுதினம் மூட்டிக்
கும்மியடியுங்கடி..

76. மூட்டுவதென்ன திரிகோண வட்ட மூலத்தில் குண்டலி
வாசியினால்
நாட்டுவன் பூரண நாலையுங் கட்டினோன் ஞாயமி
தல்லவோ ஞானப்பெண்ணே!

77. கட்டிக்கொள் விந்துவைத் தள்ளா தேசுழிக்
காற்றையடக்கிப் பெருக்காதே
சுட்டி மனப்பொறா துறாதே காமச் சோம்பலைத்
தள்ளடி ஞானப்பெண்ணே!

78. சோம்பலுந் தூக்கமும் ஆகாதே அன்ன சுகியுஞ் சோகமுங்
கொள்ளாதே
சாம்ப சதாசிவ நாட்டத்திலே நின்று சார்ந்து
கும்மியடியுங்கடி..

79. கைவச மாவது சட்டிவித் தைஞானக் கற்பகமும் வந்து
பலிக்குமடி;
தெய்வம் இவரென்று சொன்னாரே நல்ல சித்தரு
முத்தரும் ஞானப்பெண்ணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. யோகத்துக் காதி யுமைதிட் டைசமற்ற யோகத்துக் கெல்லா
முதல் திட்டை
போகத்தைக் கைவிட லாகா தேகசுத்திப் பூசையை
வேண்டிக் கொள் ஞானப்பெண்ணே!

81. வேண்டிக்கொள் விந்து முகனா தஞ்சத்தி மேவுஞ்
சிவத்துடனே பரமாம்
தாண்டிக் கொள் இந்த வகையாறும் யோகசாதன
சாக்கிரம் ஞானப்பெண்ணே!

82. சாக்கிரம் விந்துக்கு மேலண்ட மாம்அதைச் சார்ந்திடும்
நிற்குணை நிட்களந்தான்
பார்க்கில் நிராதார மாமலத் தைஅதைப் பாரா விடம்
அந்தம் ஞானப்பெண்ணே!

83. அந்த மடியிந்த மேலா றுங்கண்டே ஆரறி வாரடி
ஞானவழி?
சிந்தை தெரிந்த பெரியோ ரைக்கண்டு சேவித்துக்
கும்மியடி யுங்கடி.

84. சேவிப்ப துந்தவ னந்தியடி யோக மாய்நிற்ப தும்விந்து
நாதமடி.
ஆவிக் கிசைந்த சதாசிவ சாக்கிரம் அவ்விட மாமடி
ஞானப் பெண்ணே!

85. அவ்விட்டே யுவ்விட்டே மேற்சுழி யிறக்குழி அங்கியைவிட்டுக்
காலாலே
மவ்விட்டு நாதவிந் தூடபொரு ளைக்கண்டு வாழ்த்திக்
கும்மியடி யுங்கடி.

86. முழக்க மென்ன பிரணவ மாமதை மூட்டிச் சமாதியி
லிரேசகத்தை
விளக்கு மாகு மிரவி காந்திநித்தம் வேண்டிக்
கும்மியடி யுங்கடி.

87. பார்க்குஞ் சுழுமுனை காணா ரேயது மூக்கு நுனியென்
றறியாரே
மார்க்க மறிந்து பெரியோ ரைக்கண்டு வாழ்த்திக் கும்மி
யடி யுங்கடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88. வாழ்த்தி யடிபெண்ணே ரேசகத் தைவினை மாற்றியடி
பெண்ணே பூரகத்தை
தூற்று மகாமிய சுந்சிதத் தைத்தொல்லை தொலைத்துக்
கும்மியடியுங்கடி

89. பாசமற் றவிடம் கேசர மாம்ஒரு பாதியில் நின்றிட
யோகமுமாம்;
நேசமற் றார்பிர்ம ஞான சமாதியும் நிருவி கற்பமாம்
ஞானப்பெண்ணே.

90. கற்ப மடியிது மெய்யா குமற்றைக் கர்மமெல் லாமிக
அற்பமடி
தற்பரா னந்த சதாசிவ மோனத்தைச் சார்ந்து கும்மி
யடியுங்கடி!

91. பாசத்தைச் சொல்லும் உடலாக அந்தப் பசுவைச் சொல்லும்
உயிராக
நேசத்தில் நிற்பது யாதது பிரம நிட்டையென் பாரடி
ஞானப்பெண்ணே!

92. தேகத்துக் காதியாம் ஐம்பூ தமற்றைச் செயலுக் காதியாம்
விட்சேபம
மோகத்துக் காதியா மம்மா யைஇன்னும் முழுதுங் கேளடி
ஞானப்பெண்ணே!

93. இன்னமுண்டந்த வியாகிரு தற்கும் இரணிய கர்ப்பன்
விண்ணுவுக்கும்
மின்னிய விராட்பு ருடனுக் கும்இன் னும் மேலுண்டு
சைதன்யம் ஞானப்பெண்ணே!

94. சைதன்ய வத்துவே பிரமமடி அந்தச் சாட்சிக்குப் பிரதி
பிம்பமடி
மெய்நின்ற சுத்த அறிவா னாலப்ரதி பிம்பத்தைத்
தள்ளலாம் ஞானப்பெண்ணே!

95. ஆமடி யிந்தப் பதந்தா னேகண்டால் ஆதியும் அந்தமு
நீதானே;
நாமடி வாசிக் குதிரையி னால்மிக்க நல்ல கதியடி
ஞானப்பெண்ணே!

96. சாதிக் குதிரை வலுவே கந்தரு தாரு இருக்கின்றான் மேலாக
வீதிக்கு வீதி சாரிவைத் தார்பரி வேடிக்கை பார்க்கலாம்
ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. கட்டுப் படாதந்த அச்சுமட்டம அது காவோ
பன்னிரண்டாகையினால்
எட்டுக் கயிற்றினாற் கட்டிக்கொண் டால்இது
மட்டுப்படுமடி ஞானப் பெண்ணே!

98. கட்டுப்படுமோ மலவா யில்நடு மையத்தின் குண்டலி
வாசியினால்
எட்டையும் நாலையுங் கட்டியே போற்றிடில் ஏறி
நடத்தலாம் ஞானப்பெண்ணே!

99. சூட்சக் குதிரை யடங்கா துசுழிக் கோட்டுக்குட்
செல்ல முடியாது
மூச்சுக் காயிரங் காதவழி மிக முந்தி நடக்குதாம்
ஞானப்பெண்ணே!

100. குதிரை கட்டிய லாயத்திலே மனக் கோட்டையி லே
சந்தைப் பேட்டையிலே
எதிரிதான் வந்து தட்டுகிறான் அதை ஏனென்று
கேளடி ஞானப்பெண்ணே!

101. காமன் எவருக்கும் மூத்தவனாம் அவன் கற்றிடும்
வித்தைகள் மெத்தவுண்டாம்!
தாமத மானகு ரோதனும் லோபனுந் தம்பியாம்
கேளடி ஞானப்பெண்ணே!

102. மோக மதமிரு பிள்ளைக ளாம்ஒரு மூர்க்க மமசியக்
காரனொடு
சேகர வீ ரசை டம்பனுஞ் சம்பனுஞ் சிநேக மாமடி
ஞானப்பெண்ணே!

103. சிநேகனுக் கேற்ற உறவாளி பொல்லாத் தியவ
னாகுமோ ராங்காரி
அநேகத்தைச் செய்யு மவதியில் ரோசனும் அத்தை
மகனடி ஞானப்பெண்ணே!

104. பெண்ணே கேளு பதிமூன்றாகிய பேர்களுண்டு
பகையாளர்:
ஒன்றே யொன்று வசமா னால்அவர் ஒடுங்குவாரடி
ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. ஒடுக்கமில்லை யிவரா லேபலன் ஓட்டமெல் லாமனக்
கோட்டையிலே
படுகளத்துக்கு மேய்ந்துவ ரப்பசு பற்றுகிறாரடி
ஞானப்பெண்ணே!

106. பாம்பி ருக்குது புற்றுக்குள் ளேசுக பந்த மிருக்குது
நெஞ்சுக்குள்ளே;
வீம்பை யடக்கி உயர்ந்தக்கால் பரிவேடிக்கை
பார்க்கலாம் ஞானப்பெண்ணே!

107. பித்துப் பிடித்த மனக்குரங்கு வெறிப் பேயும் பிடித்துக்
கொண்டாட்டமிட்டால்
அத்தை யடக்க மருந்துசெய் தாற்பரி அன்று நடத்தலாம்
ஞானப்பெண்ணே!

108. நடத்தலாமே மனவாசி ஒரு நாலைந்து பீற்றலை மூடாமல்
திடத்தினால் மனஞ் சித்தானாற் சித்தந் தெளிந்து
கொள்ளலாம் ஞானப்பெண்ணே!

109. தெளிந்த சித்தகம் பூட்டிய திற்சேணத் தேறும் அறிவை
யதிற்சேர்த்துக்
குளிர்ந்து ஞானவை ராக்கியக் குறடா கொண்டு
மாட்டடி ஞானப்பெண்ணே!

110. மூலத் தெருவி லொருபாய்ச் சல்அந்த முச்சந்தி வீதியி
லோர்பாய்ச்சல்
மேலைத் தெருவி லொருபாய்ச் சல்பரி வேடிக்கை
பார்க்கலாம் ஞானப்பெண்ணே!

111. அந்த விதங்கள் அறியா மல்மணி மந்திர மென்று
திரிகின்றார்
அந்தரமான எழுத்தறிந் தால்மணி மந்திர மல்லவோ
ஞானப்பெண்ணே!

112. மவுன மந்திரங் களினாலே தங்கள் வாய்தனை
மூடித் திரிவார்கள்
புவன சாரம் புசிப்பார்க் குமதி போசனமாகுமோ
ஞானப்பெண்ணே!

113. தாயென்று சொல்லுவார் சொப்பனத் திற்காம
சன்னதம் வந்தால் நினைப்பாரோ?
வாயகொண்டு வேதம் படித்தா லுஞ்சுத்த மௌனந்
தங்குமோ ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114. தாடி வளர்த்துச் சடைவளர்த் துநல்ல சந்யாசி
யென்றோரு வேடமிட்டே
ஓடித் திரிந்த விளையாட்டை யிங்கே ஒப்புவ தாமடி
ஞானப்பெண்ணே!

115. பேசாதிருக்கும் இடம் பார்த்தே அதைப் பெற்றேயிருப்பது
மந்திரமாம்;
ஆ[illegible]னன் றேயுப தேசமிட் டார்குரு அல்லவென்
றுகும்மி யடியுங்கடி.

116. சொற்குரு வாலே கதியா மோபொய்மையச் சொல்லுவார்
தங்கள் உறவாமோ
சற்குரு வான வரைச்சேர்ந் தேயவர் தம் சொல்லைக்
கேளடி ஞானப்பெண்ணே!

117. நானென்ற ஆணவம் பேசார்கள் நல்ல நாடென்றுங்
காடென்றுஞ் சொல்லார்கள்;
தானென் றியாவையுங் கண்டாரே நல்ல சற்குரு வாமடி
ஞானப்பெண்ணே!

118. குருஇருப்பதும் உள்ளத்திலே மனக் கோணல் அறுப்பதுந்
தனக்குள்ளே
பொருள் இருப்ப தறியாமல்புடம் போடுவதெப்படி
ஞானப்பெண்ணே!

119. வாதஞ் செய்ய அறியா மல்ரச வாதஞ்
செய்கிறோமென்று சொல்லிச்
சூதங் கெந்தி புடத்திலிட் டால்அதிற் சொன்னம்
விளையுமோ ஞானப்பெண்ணே!

120. லிங்க முருக்க அலைவார்கள் சாதி லிங்க மிருப்ப
தறியாமல்;
வங்கமுந் தங்கமும் சேர்த்து ருக்கினால் பங்கமி
தல்லவோ ஞானப்பெண்ணே!

121. பாசா ணங்குகை தன்னில் வைத் துவெள்ளைப் பாஷா
ணூட்டிக் குகைமூடி
ஈசானியப்புட மிட்டாலும் அதில் இருப்ப தென்னடி
ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122\. காரணமானது காரிய மாவதைக் கட்ட அறியார்
முழுமூடர்;
பூரணமென்று திரிந்தா லுமதிற் புண்ணிய முண்டாமோ
ஞானப்பெண்ணே!

123\. மூப்பு வென்று திரிவார் கள்அந்த மூப்பு வந்த
வகைகாணார்;
அப்பு வென்று மறிந்தக் காற்சித்தி ஆமென்று கும்பி
அடியுங்கடி.

124\. காரத்தைக் கட்ட அறியார்கள் கடுஞ் சாரத்தை
நீற்றினஞ் செய்யாமல்
வீரத்தைப் பூரத்தைச் சேர்த்தத னாலது வீணல்ல
வோசொல்லு ஞானப்பெண்ணே!

125\. கோசவித் தையை யறியாமல் லோக வேசத்தி னின்று
மலைவார்கள்
கோச பீசம றிந்தா லேவாதங் கோசார மாமடி
ஞானப்பெண்ணே!

126\. வாதத் திறவுகோல் காணா ரேபஞ்ச பூதச் சரக்கையுந்
தோணாரே
ஏதுக்குக் கண்புகைந்தூதுகிவ றாரிதை ஏதென்று
கேளடி ஞானப்பெண்ணே!

127\. துருசு கன்ன முடிந்தாச் சேஅதைச் சோதிக்க எட்டரை
மாற்றாச்சு;
பொருளைச் சொல்லிப் பணம்பறிப் பாரிவர்
பொய்க்குரு அல்லவோ ஞானப் பெண்ணே!

128\. கவனி சூத முடிந்ததென்பார் ஊசிக் காந்தத்தைக்
கின்னமுஞ் செய்தோமென்பார்;
புமனி வாதப் புரட்டா லேயவர் பிழைக்கி றாரடி
ஞானப் பெண்ணே!

129\. பிழைக்க முத்தியறியாமற் சென்ம பூர்வக்கியானந்
தெரியாமல்
தழையைத் தின்று சருகாகித் திசை தயங்குறாரடி
ஞானப் பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130. துயங்கி யென்ன பலனா மோவனஞ் சாதித்து நிறகத்
திறமாமோ?
மயங்கி டாதே அழலை மகத்துவம் வருவ தெப்படி
ஞானப்பெண்ணே!

131. உப்பை யறிந்தவ னேவா திசகத் துப்பை யொழிந்த
வனேயோகி
துப்பிலை யேபூமி நாத மகிமையைச் சார்ந்து பாரடி
ஞானப்பெண்ணே!

132. வீட்டி லிருக்கு தொரு மூலம்வெளிக் காட்டி லிருக்கு
திருமூலம்;
மாட்டி லிருக்கும் பெரியோர்குரசவாதமி தல்லவோ
ஞானப்பெண்ணே!

133. தோணா தென்ற சரக்கெடுத் துக்கருஞ் சூரா சூரையில்
வைத்தெடுப்பச்
சாணான் கண்ட பொருள்போ வேசித்தி தாமென்று
கும்மியடி யுங்கடி.

134. நெல்லி யிருக்குது காட்டுக்குள் ளேகரு நெல்லியிருக்குது
வீட்டுக்குள்ளே;
கொல்லி மலைக்குத் திரிந்தாலும் குரு கொண்டு
வருவாரோ ஞானப்பெண்ணே!

135. காயம் பட்டிக்கு ளத்துக்குள் ளேவெள்ளைக் காயா
வேரு முளைத்திருக்கும்;
வாயாற நின்று நிமிர்ந்தக் காலுடல் மாயா தல்லவோ
ஞானப்பெண்ணே!

136. கற்ப நிலையறிந் தெண்ணாமல் வெறிக் கஞ்சா
உண்டு விழிப்பார்கள்!
அற்பர் குகைமலை சென்றாலும்வத்தை அறிய
லாகுமோ ஞானப்பெண்ணே!

137. கொங்கணர் சொன்ன கடைக்காண்டம் அதிற்
சங்கை யறிவது பிரமாண்டம்;
எங்கள் குருசட்டை மாமுனி யாரிரு நூறும் பாரடி
ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

138. நூறி லுரைத்தது மெய்ஞ்ஞா னந்திரு மூலர் உணர்ந்தது வேஞானம்
பூரண கும்ப முனிசொன்ன சூத்திரம் பூண்டகம் பாரடி ஞானப்பெண்ணே!

139. திட்சையில் மச்ச முனிதிட் சையவர் செப்பின ஞான மொரு நூறும்
தாழ்ச்சிவா ராது பெரியோ ரைக்கண்டு சாட்சி கேளடி ஞானப்பெண்ணே!

140. ரேசக பூரக கும்பகத் தால்வாசி நேரிட்டுச் செய்வதும் ஆசையடி;
கேசர மாகிய அத்வித பிரமத்தைக் கிட்டிக் கும்மியடியுங்கடி.

141. உப்பை விடுவதும் ஆசையடி அன்னம் ஓர்பொழு துண்பதும் ஆசையடி;
செப்ப ஒண்ணாத மனோன்மணி தேவனைச் சேர்ந்து கும்மி யடியுங்கடி.

142. வாசலி லேயொரு மேல்வாசல் அந்த வாசலி லேசிறு வாசலுண்டு;
நேசமு டன்சிறு வாசலிற் பூட்டியே நெருக்கம் பாரடி ஞானப்பெண்ணே!

143. தேசங்கள் போவதும் ஆசையடிகுல தெய்வமுன் டென்பதும் ஆசையடி;
நேச மெம்பிர மஞான சோதியைச் சேர்ந்து கும்மி யடியுங்கடி.

144. சமய பேதமும் ஆசைய டிகங்கா ஸ்நான பூசையும் ஆசையடி;
மமதை யற்றுஇருக் கின்ற மமதையை வாழ்த்திக் கும்மியடியுங்கடி.

145. பாஸ்கர வாப்பக தன்ஞங்க டிபதி பாசத்தை யும்விட்டுத் திருங்கடி;
மேல்வி ளங்கிய தற்பர சோதியை வேண்டிக் கும்மியடியுங்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146. தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடிவேத சாத்திரப்
பொத்தலை மூடுங்கடி;
முத்தி தருஞான வத்துவை வாவென்று மூட்டிக்
கும்மியடியுங்கடி.

147. ஆறா தாரமுந் தொல்லைய டியதற் கப்பாலே
யொன்றும் இல்லையடி;
சீராய் நின்ற நிலைபார்த் துப்பெண்கள் சேர்ந்து கும்மி
யடியுங்கடி.

148. சித்தா சொற்படி சித்தானந் தங்கண்டு தெளிந்து
கொள்ளடி வேதாந்தம்
தத்துவ மாகிய உறபத்தி சூக்குமச் சார்பு கேளடி
ஞானப்பெண்ணே!

149. சார்புதா னென்னடி வேதாந் தந்தெசால்லுந்
தத்துவந் தானிவ் வகையுடனே
கார ணாதி அவத்தை நிலைகளின் கணக்குரைக்கிறேன்
ஞானப்பெண்ணே!

150. உரைக்குந் தத்துவம் நாலே மூற்கண்ட ஒதுரு சித்துரு
நாலாறாம்;
மறைக்குட் சொல்லிய சித்துரு நாலாகும் மகிமை பாரடி
ஞானப்பெண்ணே!

151. மகிமை யாகிய தொம்பத மாமதில் வந்த வுபாதி
யுணர்த்துகிறேன்!
தகைமை யென்னமுன் சொன்ன வசித்திருந் தன் செயல்
கேளடி ஞானப்பெண்ணே!

152. வாசல் மிகுந்த உடம்போ டுப்ராண வாயுவோ
டிந்திரியம் ஆனதொன்று;
காசலை யாமதி சேர்ந்து வளர்ந்ததன் காரணம் நாலடி
ஞானப்பெண்ணே!

153. காரண மென்ப திவையே மும்வந்து கலந்த தாமடி
தொம்பதத்தைத்
தாரண தொம்பத மான துரியத்தில் தன்னுட லாக்குதாம்
ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

154. தன்னுடலாகிய சாக்கிரத் தைத்தனதாக விருந்திடும்
ஆத்துமற்குப்
பின் சொல்வதாம் விசுவ னென்று பிமானப்
பேரல்லோ சொல்லடி ஞானப் பெண்ணே!

155. பேர் பெறும் எந்த்ரமு பாதியுடன் கூடப் பெற்றிடு
சூட்சமச் சொப்பனத்தின்
சார்பி லிருந்த துரியற்கு நாமமூஞ் சைதன் யமடி
ஞானப்பெண்ணே!

156. ஆகும் பிராணநல்ல வாயுயவு டன்கூடி அடங்கி
மூலத்து டன்சேர்ந்து
சேகர மாவந்த நாத துரியத்தைச் சேர்ந்திடிற்
காரண தேகமடி.

157. சேர்ந்த அவத்தைச் சுழுத்திய டியதைச் சேர்ந்தவனும்
பிராக்ஞ னாகுமடி
கூர்ந்த மூன்றையுங் கண்ட துரியத்தைக் கும்பிட்டு
கும்மியடியுங்கடி!

158. கும்பிட்டுத் தொம்பதச் சித்தார்த் தங்கண்டு கூறிய
ஞாயம் இதுபோல
அம்பிட்டுத் தற்பத மான விவேகத்தை அறியச்
சொல்லுவேன் ஞானப்பெண்ணே!

159. அறிவ தென்னடி தொம்பத மாம்பொருள் ஆன
வுபாதியும். ஆனதுபோல்
சருவ தற்பர மான பொருளுக்குத் தன்னுடைச்
சிவன் துரியமடி.

160. சர்வஞ்ஞ னுஞ்சரு வக்கார னுஞ்சரு வேந்திரி
யாமிசர் வேசுரனுஞ்
சர்வ சிருட்டி சர்வதி திசர்வ சங்கார னும்பேராம்
ஞானப்பெண்ணே!

161. பேரான தென்ன இவையே மூமிகப் பேசிடில் வேதம்
துரியமடி;
தோரா உபாதியைப் பெற்றத னால்முத்தி தூசனம்
உண்டாச்சு ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

162\. துரசனைச் சிவன் இவையே மூங்கண்டு சொல்லும் பரனுக் குடலாச்சு;
சாசுவ தமென்ற தானத்தி னாற்சாயா கிரக மென்றுபேர் ஞானப்பெண்ணே!

163\. சாக்கிரந் தன்னைத்தா னென்றுசொல் வியப்பால் தானபி மானித் தருந்தாக்காற்
சேர்க்க விராட்டெனச் சொல்லுவார் நாமந் தெரிந்து கொள்ளடி ஞானப்பெண்ணே!

164\. தெரிந்த மூன்றனு பாதியு மாம்அதிற் சேர்ந்த பரன்பர சொப்பனமாம்;
பிரிந்தி டாதபி மான னிரணிய கற்பன்என் பாரடி ஞானப்பெண்ணே!

165\. பாருமி திலொரு பாதியு டன்பரா பரனுக் கல்லவோ பார்சுழுத்தி
சேரும் பொழுது வியாகிரு தனெனச் சிந்தையிற் காணடி ஞானப்பெண்ணே!

166\. காணடி தற்பர சத்தார்த் தமதைக் கண்டு தெரிந்த வகைபோல
ஊணடி ஞான சிவப தார்த்தத்தில் உண்மையைக கேளடி ஞானப்பெண்ணே!

167\. உண்மையாந் தற்பர நற்றுரி யங்கண்டும் உற்றுப்பா ராதொரு தோடமதால்
தன்மைச் சிவபத சுத்தனுக் குப்பரன் தன்னுடலாச்சது ஞானப்பெண்ணே!

168\. ஓதும் பரம்விஸ்வ கிராசமடியுப சாந்தமெ னும்வகை மூன்றி லொன்றாச்
சாதனை செய்த சிவத்துக்கல் லோபர சாக்கிரமாகுமே ஞானப்பெண்ணே!

169\. ஆகும் பொருள் சிவ சாக்கிரத் தையபி மானித்திருந்த சிவதுரியம்
சேகர மாயிடிற் சிற்சொ லிதையென்று செப்பிடும் வாக்கியம் ஞானப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

170. வாக்கிய மாம்விஸ் வகிராசம டியந்த மார்க்கமென்
னசிவ சொப்பனத்தைப்
பாக்கி யனபி மானிடத் திற்பிரசாபத்தினென்று சொல்
ஞானப்பெண்ணே!

171. சொல்வது மென்ன உபசாந் தஞ்சிவ சுழுத்தி தானென்றி
திருந்தக்கால்?
நல்லது பொற்புறு சாந்தினென் றாலது நாமம தல்லவோ
ஞானப்பெண்ணே!

172. நாமச் சிவதுரி யத்தில டியபி மான மிழந்து
தனித்ததனால்
நேமமி தல்லவோவாதி துரியத்தின் நிலைமை
கண்டிலர் ஞானப்பெண்ணே!

173. கண்டறி யாதது முற்றிரி யமதைக் கண்டு சுழுனறுமே
லானதடி;
பண்டு பிரமவா னந்த சொரூபத்தைப் பணிந்து
கும்மியடியுங்கடி.

174. பணிந்த ஞான மதுதாண் டிபர மானந்த மானது
இதுதாண்டி;
துணிந்து பாருமா னந்தசொ ரூபனைத் தொழுது
கும்மியடியுங்கடி.

175. தொழுது கொள்ளுஞ் சுகசிவ பர சுத்தப் பொருளு
மிது தாண்டி;
பழுதி லாத சொரூபக்கு ருவுடைப் பாதம் இதல்லவோ
ஞானப்பெண்ணே!

176. பாதமி தாகிய தொம்பத மாம் அதிற் பாதமுந்
தற்பர மானதடி;
பேதவு பாதி யவத்தைக ளும்பல பேர்களு மானது
ஞானப்பெண்ணே!

177. பேருக்குச் சார்ந்த துரியம டியதைப் பேசவுந் தற்பிர
காசமடி;
யாருக்குங் கண்டறி யாத பொருளைக்கண் டகந்
தெளிந்து கும்மியடியுங்கடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

178. முத்தி பெறுந்தேவ தத்தனைப் போற்சக முழுதுந் தன்மய மானதடி;
நத்தியே விட்டுவிடாதே இலக்கணை ஞானம் இதல்லவோ ஞானப்பெண்ணே!

179. ஞானமாம் மோட்சம் இதுதானே டிமற்ற ஞாயமெல் லாமனே மாயமடி;
தானசங் கற்ப விகற்ப சமயமுந் தன்மய மானது ஞானப்பெண்ணே!

180. தூர தூரமும் இல்லைய டியதைச் சொல்வதுங் கேட்பதும் இல்லையடி
தூரரார் பிரமநிலை பார்த் துப்பெண்கள் தானடிக் கும்மியடியுங்கடி.

181. அண்டமும் பிண்டமும் பாழாச் சேஅதற் கப்பா லும்பெரும் பாழாச்சே;
உண்டில்லை யென்று பராபரப் பிரமத்தை உவந்து கும்மியடியுங்கடி!

182. சொல்லினுங் கல்லினும் நில்லா தேபிரம சோதியை யாதியைத் தூவெளியை
வல்லதத் தற்பிர காச மவுனத்தை வகைய றிந்துகொள் ஞானப்பெண்ணே!

183. பிருதிவி தூய்மை மயமாச் சேயதில் பேதம் பலபல உண்டாச்சே;
சுருதி முடிவைக் குருசொல்லு வார் அந்தச் சூட்சந் தெரியுமோ ஞானப்பெண்ணே!

184. அறிந்து கொண்ட பெரியோர் பாதங்கள் அர்ச்சனை செய்து கும்மித்தமிழைப்
பிரிந்தி டாமனூற் றெண்பத்தைந் துகண்ணி பேசினேன் சற்குரு தாளவாழி!

185. சற்குரு பாத மிகவா ழிவாலை சாமி தமிழ்நிதந் தான்வாழி!
நற்குணா ஞானக்கும் மித் தமிழ் கற்றவர் ஞான நெறியே மிக வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org